தொழிலாளியின் மனைவி முறத்தால் தன் முகத்தை மறைத்துக்கொண்டு பதைப்புடன் வந்து விடு என்று அழைக்கிருள் தன் கணவனை.

தொழிலாளி, அதற்குப் பதில் கூறும்முகத்தால் கிழக்கு வெளுக்குமுன் பத்துக்கோடி புடவைகள் (ஒருகோடி 20 புடவைகள்) நீலம் துவைத்தாக வேண்டும் என்று கூறி மனைவியின் அழைப்புக்கு வருந்தித் தன் தலைமயிரைப் புய்த்துக் கொள்ளுகிருன்.

ஐந்தாவது கட்டம்—

கொள்ளைக்காரர்கள், அரணிக்கட்டையில் தீக்கடைகிருர்கள். சுளுந்து கொளுத்துகிருர்கள். கொளுத்திய சுளுந்தக் கழிகளைக்கொண்டு குடிசைகளைக் கொளுத்துகிருர்கள். ஊர்மக்கள் பல புறங்களிலும் சிதறி ஓடுகிருர்கள்.

தொழிலாளியின் மனைவி தன் கணவனுக்குக் காட்டுகிருள் தீயை.

தொழிலாளி, அவுரி நீலம் துவைத்த புடைவைகளைத் தீ ஒன்றும் செய்யாது என்று விடைகூறித் தோய்த்த புடைவைகளை விரைவாக எண்ணுகிருன்

ஆருவது கட்டம்—

கொள்ளைக்காரர் தொழிலாளியை நோக்கி வருகிருர்கள்.

மனைவி கணவனை அழைக்கிருள். கொள்ளைக்காரர் வருவதைக் காட்டுகிருள். தொழிலாளி நீலந் துவைத்துப் பிழிந்து போட்ட புடவைகள் இருபது கோடி ஆய்விட்டது என்று மனைவியிடம் கூறி மகிழ்

விழாத் தொடங்கும் முரசும் அதிர்வேட்டும் முழங்கின.

ஒருபுறம் மறவர் பலர் மற்போர் இட்டனர்.

ஒருபுறம் குதிரை யேற்றம். மற்ருெரு பால் யானை யேற்றம். இன்னெருபுறம் காலாட்களின் அணி வகுப்பு. ஆடவர் பெண்டிர் புதுப்புனல் ஆடுகின்ருர்! அங்கொருபுறம் சேவர்போர்! காடைச் சண்டை ஒரு பால். வாட்போர் ஒருபால். விற்போர் ஒருபால்,

பாடுநர் ஒருபாங்கு! ஆடுநர் ஒருபாங்கு! கழைக்கூத்து மற்ருெரு பாங்கு! தோற்பாவைக் கூத்து இன்னெரு புறம்.

அங்கங்கு மக்கள் கூடிக் காட்சியின் மகிழ்ச்சி ஆழ்கின்ருர்கள்.

புதியதோர் அதிர்ச்சி! — பொற்றேர் ஒன்று விழாவின் நடுவில் ஊடுருவுகின்றது. மக்கள் கை தட்டி ஆர்க்கின்ருர்கள்! வாழ்க ஆதிமந்தியார்! வாழ்க ஆட்டனத்தியார். வாழ்க சேர மன்னியார்! என்ற வாழ்த்தொலி வானைத் பிளக்கின்றது.

ஆட்டனத்தியை, அவன் தாயை, ஆதிமந்தியை, சோழனும், சோழமன்னியும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் வரவேற்கிருர்கள்.

சோழன், மன்னிமார், ஆட்டனத்தி, ஆதிமந்தி, கால் நடையாக அங்கங்கு நிகழ்த்தப் பெறும் காட்சிகளைக் காணுவாராயினர்.

நெய்தலி அவன் கையைவிட்டு ஊர் நோக்கி விரைந்து ஓடுகிருள். அங்கு மரத்தில் பதுங்கி யிருந்த கள்வன் ஒருவன் எதிர்ப்படுகிருன்.

**கள்வன்** :-நில் !

**நெய்தலி** :-ஐயோ நீர் கள்வரா ? நான் அணிந்துள்ள விலையுயர்ந்த முத்துத் தொங்கல் முதலிய எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறேன். உமக்குத் தேவையானது உடைமைதானே ! உயிர் அல்லவே !

**கள்வன்** :-மூன்று. உடைமை, உன் உடல், உயிர்— ஆகக்கூடி நீ !

**நெய்தலி** :-நான் நன்ருயிருக்கிறேனு ?

**கள்வன்** :-குழம்பிலிட்ட நெற்றிலி மீன்போல் இருக்க வில்லையா உன் பேச்சு! கண் கருநாவற் பழம் ! மூக்கு சிறு முள்ளங்கி. உதடு பலாச் சுளை. பல்லி முட்டைப் பல். சொல்லவர வில்லை உள்ளத்தில் இனிக்கிறதாயினும்— வருகிருயா என்னுடன்? நீ வந்த வழியில் ஏதாவது புதுமை கண்டாயா ? அங்கு நான் சேற்றுப் பள்ளம் வெட்டி வைத்தேன். அதில் யாராவது சிக்கியிருக்கப் பார்த்தாயா ?

**நெய்தலி** :-சிக்கிக்கொண்டால் என்ன செய்வது ?

**கள்வன்** :-அகப்பட்டவரைக் கொன்று, அவர் அணி களைச் சுருட்டிக் கொள்வதுதான். வா, பள்ளத்தைப் போய்ப்பார்த்து வரலாம்.

